# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# STC. No.1037/2022 P.W.10

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாண்டி | த-பெ | ராமசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **23.06.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து சார்பு ஆய்வாளராக பணி செய்து ஓய்வில் இருந்து வருகிறேன். கடந்த 18.08.2022 அன்று பள்ளத்துார் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது காரைக்குடி அரசு மருத்துவமனையில் இருந்த கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு காலை 11.00 மணிக்கு சென்று காயம்பட்ட நமீதா வயது 27/2022 க/பெ ஆதிநாராயணன் காமராஜர் நகர், கொத்தடி, பள்ளத்துார் போஸ்ட் காரைக்குடி தாலுகா என்பவரை விசாரணை செய்து நிலையம் வந்து குற்ற எண்.79/2022 இதச பிரிவுகள் 294(b), 323, 506(i) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5.**

பின்னர் வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே 13.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் வீரக்குமார் மற்றும் ரமேஷ் குமார் ஆகியோகள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6.**

வழக்கின் எதிரியை தேடி சென்ற நிலையில் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன் ஜாமின் பெற்று விட்ட காரணத்தால் அவர்களை கைது செய்ய இயலவில்லை. இந்த வழக்கில் சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெயபாண்டி, அரசு மருத்துவமனை காரைக்குடி என்பவரை விசாரணை செய்து அவரிடம்இருந்து காய சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். அதில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயமானது சாதாரன வகையை சேர்ந்தது என்று சான்று அளித்துள்ளார். வழக்கின் விசாரணை நிறைவு செய்து 20.09.2022 அன்று மேற் சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக புகார்தாரர் புகாரை எவ்வாறு எழுதி கொடுத்தார் என்றால் எழுத்து மூலமாக மருத்துவமனையில் எழுதி வைத்திருந்த புகாரை கொடுத்தார்கள். 17.08.2022 அன்று காவல் நிலையத்தில் வந்து புகார் கொடுத்து சரியா தவறா என்றால் தவறு. காவல் நிலையத்திற்கும் சம்வயிடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 2 கி.மீ. புகார் வாங்கிய அன்றே சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். எதிரியும், புகார்தாரர் குடும்பமும் உறவுனர்கள் என்று விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். சம்பவத்தன்று எதிரி கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தது பற்றி தகவல் வந்ததா என்றால் சரிதான் அதை மற்றோறு சிறப்பு சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார் அதன் குற்ற எண்.80/2022. மேற்படி வழக்கு என்ன ஆனது என்று எனக்கு தெரியுமா என்றால் எதிரியை கைது செய்து தக்க நடவடிகக்கை எடுத்துள்ளோம். இந்த வழக்கில் 1 முதல் 8 சாட்சிகளும் ஒரே குடும்பத்தை சேர்ந்த உறவினர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும் புகார்தாரர் குடும்பத்திற்கும் இடையே சொத்து சம்மந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் கிழ்மேல் ரோடு என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு மேற்கே உள்ள கணபதி என்பவர் வீட்டில் இருந்து யாரையாவது விசாரணை செய்தேனா என்றால் இல்லை அந்த சமயத்தில் வீட்டில் யாரும் இல்லை. சம்பவயிடத்திற்கு தெற்கே அழகர் சாமி வீட்டில் யாரையாவது விசாரணை செய்தேனா என்றால் மதியம் நேரம் என்பதால் வீட்டில் யாரும் இல்லை. சம்பவயிடம் சுற்றி யாரும் ஆள் இல்லாததால் அவர்கள் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை. புகார்தாரர் குடும்பத்தார் தான் எதிரியை அடித்து காயப்படுத்தினார்கள் ஆனால் அதை மறைத்து எதிரி மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையில் அந்த இடத்தில் நடந்திருந்தால் அந்த இடத்தை சுற்றி உள்ள வீட்டில் இருப்பவர்களை சாட்சியாக போட்டிருப்பேன் என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் கூறியது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன தேதியில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் தரப்பு தான் எதிரியை தாக்கினார்கள் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.06.24 11:06:32 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.